விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 12 புதன் 26.05.2021 மலர் - 2, இதழ் - 50

# ஊடகங்களின் நடுநிலைத்தன்மை




பீகாரில் சமீபத்தில் நடைபெற்ற பூர்னியா வன்முறையை 'ஹிந்துக்கள் மீதான ஜிஹாதி தாக்குதல்' என்று குறிப்பிட்டதற்காக ஆர்கனைசர் பத்திரிகை ஆசிரியர் பிரபுல்லா கெட்கரின் டுவிட்டர் கணக்கிற்கு, டுவிட்டர் நிர்வாகம் தடை விதித்துள்ளது. இந்த கொடூரமான ஜிஹாதி தாக்குதல் குறித்த செய்திகளை, மற்ற பத்திரிகைகளும், தொலைகாட்சிகளும், சமூக ஊடகங்களும் வெளியிடாமல் மறைத்தபோது ஆர்கனைசர் பத்திரிகை மட்டுமே இதனை குறித்து முழுமையாக செய்தியை வெளியிட்டது. கருத்துச் சுதந்திரம் குறித்த டுவிட்டரின் இரட்டை நிலைப்பாட்டையும் மற்ற பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், சமூக ஊடகங்களின் நடுநிலைத்தன்மையை குறித்தும் அம்பலப்படுத்தும் மற்றொரு நிகழ்வாக இது அமைந்துள்ளது.

**என்ன நடந்தது பூர்னியாவில்?**

பீகாரின் பூர்னியா மாவட்டத்தின் மஜ்வா கிராமத்தில், 'மஹாதலித்' என்கிற பட்டியலினத்தவர்கள் சமூகத்தை சேர்ந்த60 குடும்பங்கள் வசிக்கின்றன. அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட முஸ்லிம் வன்முறையாளர்கள், மஹாதலித்துகள் காலனியை கடந்த மே 19 அன்று இரவு சுற்றி வளைத்து தீக்கிரையாக்கினர். கொடூரமான இந்த சம்பவத்தில் 12க்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன.இந்த கும்பல் தலித்துகளை கொடூரமாக தாக்கியது, ஆண்கள், குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என அனைவரையும் வீடுகளில் இருந்து வெளியே இழுத்து வந்து கூர்மையான ஆயுதங்களால் கொடூரமாக தாக்கினர். இந்த தாக்குதலில் வயதான ஓய்வுபெற்ற காவலாளி மேவலால் ராய் கொல்லப்பட்டார். பீகார் அரசு இந்த கொடூர சம்பவம் தொடர்பாக இதுவரை யாரையும் கைது செய்யவில்லை, பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான உதவிகளை செய்ய எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

இந்த தாக்குதல் குறித்து விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளதுடன் மாநில அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ளது.மேலும், பாதிக்கப்பட்ட பட்டியலின சகோதர குடும்பங்களுக்கு பல்வேறு உதவிகளையும் செய்து வருகிறது.இந்த கொடூர சம்பவம் நடந்தது பைசி சட்டமன்றத் தொகுதியில்.இதன் சட்டமன்ற உறுப்பினர் சையத் ருக்னுதீன் அகமது என்பவர் அசாதுதீன் ஒவைசி தலைமையிலான அகில இந்திய மஜ்லிஸ்இஇத்தேஹாத் உல்முஸ்லிமீன் (ஏ.ஐ.எம்.ஐ.எம்) கட்சியை சேர்ந்தவர் என்பதும் தமிழகத்தில் அந்த கட்சி தினகரனின் அ.ம.மு.கவுடன் கூட்டணி வைத்து தேர்தலை சந்தித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# குடியரசு தலைவருக்கு பிரபலங்கள் கடிதம்

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள், பல துறைகளைச் சேர்ந்த முன்னாள் அதிகாரிகள், தூதர்கள் மற்றும் முன்னாள் ராணுவ வீரர்கள் உள்ளிட்ட 146 பேர், கடந்த திங்கட்கிழமை அன்று பாரத குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் மற்றும் தலைமை நீதிபதி என்.வி. ரமணா ஆகியோருக்கு மேற்கு வங்கத்தில் வாக்கெடுப்புக்கு பிந்தைய வன்முறைகள் குறித்து விசாரிக்க சிறப்பு விசாரணைக் குழுவை (எஸ்.ஐ.டி) உடனடியாக அமைத்து விசாரிக்கக் கோரி கடிதம் எழுதியுள்ளனர். அதில், 'மேற்கு வங்கம் ஒரு முக்கியமான எல்லை மாநிலமாக இருப்பதால், தேசத்தின் கலாச்சாரம் மற்றும் ஒருமைப்பாடு மீதான தேச விரோதத் தாக்குதலைச் சமாளிக்க இந்த வழக்குகளை என்.ஐ.ஏவிடம் ஒப்படைக்க வேண்டும்.' என்று கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும், 'திருணமுல் கட்சியின் குண்டர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட வாக்கெடுப்புக்கு பிந்தைய வன்முறையில் 25 க்கும் மேற்பட்ட பா.ஜ.க உறுப்பினர்கள், ஆர்.எஸ்.எஸ் தன்னார்வலர்கள் உயிர் இழந்துள்ளனர். மேற்கு வங்கத்தின் 23 மாவட்டங்களில் 16 மாவட்டங்களில் 15,000 க்கும் மேற்பட்ட வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன.சுமார் 5,000 பேர் தங்கள் உயிரைக் காப்பாற்ற மற்ற மாநிலங்களுக்கு தப்பிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.ஆளுநர் ஜகதீப் தங்கரை வன்முறை பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு செல்வதைத் தடுக்க மம்தா பானர்ஜி எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். ஆனாலும், ஆளுனர் மேற்கு வங்கத்தில் வன்முறை பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு விஜயம் செய்தது மட்டுமல்லாமல், அசாமில் உள்ள முகாமையும் பார்வையிட்டார்.' போன்ற விவரங்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கடிதத்தில் கையெழுத்திட்ட 146 பேரில் 17 ஓய்வு பெற்ற நீதிபதிகள், 32 ஐ.பி.எஸ் அதிகாரிகள், 31 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள், 10 தூதர்கள் மற்றும் 56 ராணுவ வீரர்கள் அடங்குவர். முன்னாள் தூதர் பாஸ்வதி முகர்ஜி மற்றும் மகாராஷ்டிராவின் முன்னாள் டி.ஜி.பி பிரவீன் தீட்சித் ஆகியோர் கையெழுத்திட்டவர்களின் பட்டியலுடன் இந்த கடிதத்தை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்தனர். இதே கருத்தை வலியுறுத்தி சுமார் 2,093 பெண் வழக்கறிஞர்கள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா மற்றும் துணை நீதிபதிகளுக்கு மற்றொரு கடிதம் எழுதியுள்ளனர்.



# கொரோனா குழந்தைகளுக்கு பாதிப்பா?

இன்னும் மூன்று முதல் ஆறு மாதங்களுக்குள் கொரோனா மூன்றாவது அலை உருவாகும் என்றும், இந்த தொற்று பரவலின் போது, வைரஸ் மேலும் உருமாற்றம் அடைந்து அதனால் குழந்தைகள் அதிக அளவில் பாதிக்கப்படுவர் என்றும் கூறப்படுகிறது.இந்த சூழலில், இதை குறித்து கருத்து தெரிவித்த நிடி ஆயோக் உறுப்பினர் வி.கே.பால், 'குழந்தைகளுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டாலும், லேசான அறிகுறிகளே தென்படும்.சாதாரண காய்ச்சல், சளி போல வந்து சரியாகி விடும்' என்றார். 'கொரோனா மூன்றாவது அலையில் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுவர் என்று கூறப்படுவதற்கு அடிப்படை ஆதாரங்கள் இல்லை, எனவே, குழந்தைகள் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை; யாரும் அச்சப்பட தேவையில்லை' என, குழந்தைகள் மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



# தி.மு.க. வினர் அட்டகாசம்

தமிழகத்தில் விதிக்கப்பட்டுள்ள தளர்வில்லா ஊரடங்கின்போது முதல்வரான தங்கள் கட்சித் தலைவர் ஸ்டாலின் போட்ட ஊரடங்கு சட்டத்தை மதிக்காமல் 25க்கும் மேற்பட்ட தி.மு.கவினர் கூட்டமாக பெருங்குடி மண்டல அலுவலகம் வந்து அலுவலக கூட்ட அறையில் முதல்வர் ஸ்டாலின் புகைப்படத்தை வைத்து கோஷமிட்டனர். இதில், சிலர் முக கவசம் அணியவில்லை.யாரும் சமூக இடைவெளியை கடைபிடிக்கவில்லை.இது, மண்டல அலுவலக ஊழியர்கள், பொதுமக்கள் என அனைவரிடமும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.கட்சி தலைமை, இவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் அளிப்பதுடன் கட்சி ரீதியாகவும் கடும் நடவடிக்கை எடுத்தால்தான் இது போன்றவர்கள் பொறுப்புடன் நடந்துகொள்வார்கள். தலைமைக்கும் நல்ல பெயர் கிடைக்கும் என பொதுமக்கள் கருத்து தெரிவித்தனர். (புகைப்பட உதவி: தினமலர்)



# திருநங்கைகளுக்கு உதவித்தொகை



கொரோனா பெருந்தொற்று மற்றும் ஊரடங்கால் அனைத்து தரப்பு மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் திருநங்கைகளும் விதிவிலக்கில்லை.இந்நிலையில், 'திருநங்கைகளுக்கு உதவ வேண்டும்' என்று திருநங்கைகள், தன்னார்வலர்கள்' மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். இதனை பரிசீலித்த மத்திய அரசின் திருநங்கைகளின் நலனை கவனிக்கும் மத்திய சமூக நீதி மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சகம், திருநங்கைகளுக்கு உதவிடும் வகையில் தலா ரூ.1,500 வழங்க முடிவு செய்துள்ளது. திருநங்கைகள் அல்லது அவர்கள் சார்ந்துள்ள சமுதாய அமைப்புகள் http://forms.gle/H3BcREPCy3nG6TpH7 என்ற இணைய பக்கத்தில் ஆதார் எண், வங்கி கணக்கு எண் போன்ற விவரங்களை தெரிவித்து உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.

# லாட்டரி விற்க கார்த்திக் சிதம்பரம் யோசனை

தமிழக அரசு வருவாயை பெருக்கலாட்டரி விற்பனையை அரசு மீண்டும் கொண்டு வரவேண்டும்.அதனை அரசே ஏற்று நடத்த வேண்டும் என தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார் ப.சிதம்பரத்தின் மகனும் சிவகங்கை காங்கிரஸ் தொகுதி எம். பியுமான கார்த்தி சிதம்பரம்.இதனால் பல குடும்பங்கள் சீரழிந்ததை



கருத்தில் கொண்டு முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதா லாட்டரியை தடை செய்ததை மீண்டும் கொண்டுவர யோசனை தெரிவித்துள்ள கார்த்தைக் சிதம்பரத்துக்கு பொதுமக்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# மருத்துவப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் ஈஷா

கொரோனா தொற்றின் இரண்டாவது அலையின் பாதிப்பு அதிகரித்துள்ள சூழலில், அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் இரவு, பகலாக சேவையாற்றி வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் விதமாக, உணவு, சிற்றுண்டிகளை வழங்க ஈஷா முடிவு செய்துள்ளது. தற்போது, சென்னை, கோவை, வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்களுக்கு உணவு, சிற்றுண்டி போன்றவற்றை ஈஷா வழங்கி வருகிறது. தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் ஆகிய மாவட்டங்களில் இன்னும்|ஓரிரு நாட்களில் வழங்கப்பட உள்ளது. புதுச்சேரியில் பணியாற்றும் முன்களப் பணியாளர்களுக்கான சிற்றுண்டி பாக்கெட்டுகள் துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜனிடம் நேரில் வழங்கப்பட்டது. இதைத்தவிர, கோவையில் 43 கிராமங்களை தத்தெடுத்து கரோனா நிவாரணப் பணிகளை ஈஷா மேற்கொண்டு வருகிறது.' என கோவை ஈஷா யோகா அறக்கட்டளை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# இன்று முழு சந்திர கிரகணம்

இன்று (மே 26) வானில் முழு சந்திர கிரகணம் ஏற்படவுள்ளது. தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா, அண்டார்டிகா, பசிபிக் பெருங்கடல், இந்திய பெருங்கடலை ஒட்டிய இடங்களில் இந்த சந்திர கிரகணம் தெரியும். பாரதத்தில், பெரும்பாலான வட கிழக்குப் பகுதிகள், மேற்கு வங்கத்தின் ஒரு சில இடங்கள், ஒடிசா மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளின் சில கடற்கரைப் பகுதிகளில் சந்திர உதயத்திற்குப் பிறகு, பகுதி சந்திரகிரகணம் குறுகிய காலத்திற்கு தெரியும்.இந்த சந்திர கிரகணம், இந்திய நேரப்படி பிற்பகல் 3.15 மணிக்குத் தொடங்கும். முழு சந்திர கிரகணம், மாலை 4:39 மணிக்குத் துவங்கி, 4:58 மணிக்கு நிறைவடையும்.மாலை 6:23 மணிக்கு முடிவடையும். அடுத்த சந்திர கிரகணம், 2021, நவம்பர் 19ல் பாரதத்தில் பகுதி சந்திர கிரகணமாக தெரியும்.பூமிக்கு மிக நெருக்கத்தில் நிலவு வரும்போது, வளி மண்டல ஒளிச் சிதறல் காரணமாக ரத்தச்சிவப்பு நிறத்தில் வழக்கத்தை விட பிரகாசமாக காட்சி அளிக்கும். ஆரஞ்சு நிறத்திலிருந்து ரத்த சிவப்பு வரையிலான நிறங்களில் தெரிவதால் இது 'ரத்த நிலா' என அழைக்கப்படுகிறது.



# களப்பணியாளர்கள் மாற்றப்படமாட்டார்கள்

கொரோனா நோய்த் தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்களை நீக்கிவிட்டு, புதிதாக வேறு நபர்களை பணியமர்த்த வேண்டுமென சென்னை மாநகராட்சி அதிகாரிகளை மிரட்டுவதாக வந்த செய்தியை கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார் அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம். மேலும், 'இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் முதலமைச்சரை கேட்டுக்கொண்டார். இதனையறிந்த முதல்வர் ஸ்டாலின், ‘தற்போது பணிபுரியும் களப்பணியாளர்கள் யாரும் நீக்கப்பட மாட்டார்கள்’ என்ற உத்திரவாதத்தை சென்னை மாநகராட்சி ஆணையர் வழியாக ஓ.பி.எஸ்சுக்கு தெரிவித்துள்ளார். இதனையடுத்து, ஸ்டாலினுக்கு தனது நன்றியினை தெரிவித்துக் கொண்டுள்ளார் ஓ.பி,எஸ்.



# பதஞ்சலி நிறுவனத்தில் கொரோனா இழப்பு

யோகா குரு பாபா ராம்தேவின் பதஞ்சலி நிறுவனத்தின் பால் பொருட்கள் பிரிவின் துணைத் தலைவர் சுனில் பன்சால் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். பதஞ்சலி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், “பதஞ்சலி நிறுவனத்தின் பால் பொருட்கள் பிரிவின் துணைத் தலைவர் சுனில் பன்சால் கொரோனாத் தொற்றால் ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் மருத்துவமனையில் உயிரிழந்தார். அவரின் மனைவி ராஜஸ்தான் அரசின் சுகாதாரத்துறையில் முக்கிய அதிகாரியாக இருக்கிறார். சுனில் பன்சாலுக்கு வழங்கப்பட்ட அலோபதி சிகிச்சையில் எந்தவிதத்திலும் பதஞ்சலி நிறுவனம் தலையிடவில்லை.பன்சாலின் மனைவியின் கண்காணிப்பில்தான் சிகிச்சை நடந்தது.எங்கள் நிறுவனத்தின் துடிப்புமிக்க அதிகாரியான பன்சாலை இழந்தது வருத்தமும், வேதனையும் அளிக்கிறது, துரதிர்ஷ்டமானது” எனத் தெரிவித்துள்ளது.

# மொஹுல் சோக்ஸி காணவில்லை



தப்பியோடிய வைர வியாபாரி மெஹுல் சோக்ஸி ஆன்டிகுவா மற்றும் பார்புடாவில் காணாமல் போனதாக அவரது வழக்கறிஞர் விஜய் அகர்வால் கூறியுள்ளார்.காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பல அரசியல்வாதிகள் துணையுடன் மெஹுல் சோக்ஸி தன் மருமகன் நீரவ் மோடியுடன் சேர்ந்து, பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ.13,600 கோடிக்கு மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டவர்.இந்த மோசடி 2018ல் வெளிச்சத்துக்கு வந்தது. இதனால் அவர் தனது மருமகனுடன் சேர்ந்து நாட்டை விட்டு தப்பியோடினார்.சோக்ஸி ஆன்டிகுவாவில் தஞ்சம் அடைந்தார். அவரை பாரதத்திற்கு கொண்டுவர மத்திய அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது.ஆன்டிகுவா பிரதமர் காஸ்டன் பிரவுன்,'சோக்ஸியின் குடியுரிமை தொடர்பான அனைத்து சட்டரீதியான பிரச்சனைகள் தீர்ந்தவுடன் அவரது குடியுரிமையை ரத்து செய்து பாரதத்திடம் ஒப்படைக்கப்படுவார்' என்று கூறியிருந்தார். இந்நிலையில், தீவின் தெற்கு பகுதியில் உள்ள ஒரு உணவகத்தில் இரவு உணவிற்கு சென்ற சோக்ஸி வீடு திரும்பவில்லை.அவரது கார் ஜாலி துறைமுகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.கியூபாவுடன் கைதிகள் ஒப்படைப்பு ஒப்பந்தத்தை பாரதம் மேற்கொள்ளவில்லை என்பதால் அவர் கியூபாவுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# விதிகளுக்கு இணங்காத சமூக ஊடகங்கள்

சமூக ஊடகங்களுக்கான விரிவான வழிகாட்டுதல்களை கடந்த பிப்ரவரி 25, 2021 அன்று வெளியிட்ட மத்திய அரசு, சமூக ஊடக நிறுவனங்கள் இந்த விதிகளுக்கு முழுமையாக இணங்க மூன்று மாத கால அவகாசம் அளித்தது. காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்த சூழலில், பிரபல சமூக ஊடக நிறுவனங்கள் எதுவும் புதிய விதிகளை பின்பற்றவில்லை என்று கூறப்படுகிறது.சமூக ஊடக நிறுவனங்கள் இந்த விதிகளுக்கு இணங்கவில்லை என்றால், அவர்கள், தங்கள் சமூக ஊடக தளங்களுக்கான அந்தஸ்தையும் பாதுகாப்பையும் இழக்கக்கூடும்.பாரதத்தின் சட்டங்களின்படி குற்றவியல் நடவடிக்கைகளுக்கு அவர்கள் பொறுப்பாவார்கள் என்றும் கூறப்படுகிறது. பாரதத்தை சேர்ந்த சமூக ஊடக நிறுவனமான “கூ”வைத் தவிர தவிர, சமூக ஊடக நிறுவனங்கள் எதுவும் புதிய வழிகாட்டுதல்களின்படி மக்கள் குறை தீர்க்கும் அதிகாரி, நோடல் தொடர்பு நபர்களை நியமிக்கவில்லை.சில சமூக ஊடகத் தளங்கள் அமெரிக்காவில் உள்ள தங்கள் நிறுவனத்தின் தலைமையகத்தின் அறிவுறுத்தல்களுக்காக காத்திருப்பதாக ஒரே பதிலை சொல்லிவருகின்றன.சில சமூக ஊடகத் தளங்கள் விதிகளுக்கு முழுமையாக இணங்க ஆறு மாதங்கள் வரை அவகாசம் கோரியுள்ளன.டுவிட்டர் போன்ற சில சமூக வலைத்தளங்கள் தங்களது சொந்த உண்மைச் சரிபார்ப்பவர்களை சில அன்னிய நிறுவனங்கள் வாயிலாக பணிக்கு அமர்த்தியுள்ளன. ஆனால் அவர்களின் முழு விவரங்களை அளிக்கவில்லை, அவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், அவர்களின் நிலைப்பாடு என்ன என்பதிலும் வெளிப்படைத்தன்மை இல்லை. இந்நிலையில், டுவிட்டர், முகநூல் உண்மை சரிபார்ப்பாளர்கள் தான்தோன்றித் தனமாகவும், ஒரு சார்பாக செயல்படுகின்றனர், அவர்கள் சட்டதிட்டங்களுக்கு விரோதமாக நடக்கின்றனர் எனவே அவற்றை முடக்க வேண்டும் எனும் கோரிக்கைகளும் சமூக ஊடக பயன்பாட்டாளர்களிடம் தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது.

# பாபா ராம்தேவும் அலோபதியும்

ஹரித்வாரில் ஆயுர்வேதம் மற்றும் அலோபதி மருத்துவ முறை இணைந்த கொரோனா சிகிச்சை மையத்தை உருவாக்கி உள்ளதாக அறிவித்தார் பிரபல யோகா குரு பாபா ராம்தேவ். இந்த கொரோனா சிகிச்சை மையத்தில் அடிப்படை வசதிகள் எதுவும் முறையாக இல்லை என கூறப்பட்டது.சில நாட்களுக்கு முன்பு நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ராம்தேவ், அலோபதி மருத்துவத்தால் கொரோனாவுக்கு மக்கள் பலியாகின்றனர். இது ஒரு முட்டாள்தனமான சிகிச்சை முறை என கூறினார்.இது அலோபதி மருத்துவர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாக பாபா ராம்தேவுக்கு இந்திய மருத்துவர் சங்கம் (ஐ.எம்.ஏ) நோட்டீஸ் அனுப்பியதுடன் பாபா ராம்தேவை கைது செய்யவும் வலியுறுத்தியது. இந்த கடிதத்தில் கையெழுத்திட்டவர் தமிழகத்தை சேர்ந்த ஐ.எம்.ஏவின் தேசியத் தலைவர் டாக்டர் ஜே.ஏ.ஜெயலால்

### யார் இந்த ஜெயலால்?

கிறிஸ்தவரான டாக்டர் ஜே.ஏ.ஜெயலால், சக மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், நோயாளிகளிடம் கிறிஸ்துவ மதத்தை பரப்ப, இந்திய மருத்துவ சங்கத்தையும், தன் பதவியையும் ,மருத்துவமனைகளையும் தவறாக பயன்படுத்த விரும்பியதாக குற்றம் சாட்டப்பட்டவர்.

### மன்னிப்பு கேட்ட யோகா குரு:

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷவர்தன், பாபா ராம்தேவ் தனது கருத்தை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தினார்.பாபா ராம்தேவும் தன்னுடைய கருத்துகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மன்னிப்பும் கேட்டார்.

### ராம்தேவின் கேள்விகள்:

இந்நிலையில், இந்திய மருத்துவர் சங்கத்திடம், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் தூக்கமின்மைக்கு அலோபதியில் நிரந்தர சிகிச்சைகள் உள்ளதா என்பது உள்ளிட்ட 25 கேள்விகளை கேட்டுள்ளார். அதில், உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதன் சிக்கல்கள், நீரிழிவு (வகை 1, வகை 2) மற்றும் அவற்றின் சிக்கல்கள், தைராய்டு, கீல்வாதம், பெருங்குடல் அழற்சி, ஆஸ்துமா, காசநோய், அம்மை, கல்லீரல் கொழுப்பு, கல்லீரல் சிரோசிஸ், ஹெபடைடிஸ், மலச்சிக்கல், இரைப்பை, அமிலத்தன்மை, ஹீமோகுளோபின், கண்பார்வை, செவிப்புலன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு தலைவலி, ஒற்றைத் தலைவலி, தூக்கமின்மை ஆகியவற்றுக்கு சிகிச்சையளிக்க அலோபதி எந்த பக்கவிளைவுகளும் இல்லாத நிரந்தர தீர்வை வழங்குகிறதா? என கேட்டுள்ளார்.

### தொடரும் கேள்விகள்:

இதயம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு அலோபதியில் அறுவை சிகிச்சை இல்லாத சிகிச்சைகள் என்ன உள்ளது?ஈறுகள், பற்கள் பலவீனமடைவதைத் தடுக்கக்கூடிய நிரந்தர சிகிச்சையை வழங்க முடியுமா?அறுவை சிகிச்சை இல்லாமல் ஒரு நபர் ஒவ்வொரு நாளும் அரை கிலோ முதல் ஒரு கிலோவரை எடையை குறைக்க உதவும் ஒரு மருந்து இருக்கிறதா? தடிப்புத் தோல் அழற்சி, கீல்வாதம், வெண் புள்ளிகள், பார்கின்சன் நோய், ஸ்பான்டைலிடிஸ் ருமட்டாய்ட் ஆர்த்தரைடிஸ் ஆகியவற்றை நேர்மறையிலிருந்து எதிர்மறையாக மாற்றுவதற்கு அலோபதி மருத்துவர்கள் நிரந்தர தீர்வை வழங்க முடியுமா? மன அழுத்த ஹார்மோன்களைக் குறைக்கவும், அலோபதியில் மகிழ்ச்சியான, நல்ல ஹார்மோன்களை அதிகரிக்கவும் ஏதாவது சிகிச்சை

உள்ளதா?ஐ.வி.எஃப் தவிர, அலோபதி கருவுறாமைக்கு ஏதாவது இயற்கை முறையிலான சிகிச்சை உள்ளதா?போதைப்பொருள் பழக்கவழக்கத்தையும் கைவிட அலோபதி மருந்து ஏதேனும் உள்ளதா?கொரோனா நோயாளிகளுக்கு திரவ மருத்துவ ஆக்ஸிஜனைப் பயன்படுத்தாமல் சிகிச்சையளிக்க தீர்வு இருக்கிறதா?கடைசியாக, ஒவ்வொரு நோய்க்கும் அலோபதி தீர்வு மற்றும் சிகிச்சையை கொண்டிருக்கும்போது மருத்துவர்கள் ஏன் நோய்வாய்ப்படுகிறார்கள்?என கேள்வி எழுப்பியுள்ளார்.

### கொரோனாவுக்கு எதிரான போரில் பதஞ்சலி:

கொரோனா மருத்துவம் தொடர்பாக பல்வேறு சர்ச்சைகளில் தொடர்ச்சியாக சிக்கினாலும் பதஞ்சலி கொரோனாவுக்கு எதிரான போரில் நிதியுதவி, மருத்துவம் என முக்கிய பங்காற்றியுள்ளதை யாரும் மறுக்க முடியாது. சமீபத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டி.ஆர்.டி.ஓ) கண்டுபிடித்த 2டியோக்ஸிடி குளுக்கோஸ் (2டிஜி) என்ற கொரோனா எதிர்ப்பு சிகிச்சை மருந்துக்கு ஒப்புதல் பெற்றது. அந்த மருந்து கொரோனா நோயாளிகள் விரைவாக நலம் பெறவும் ஆக்ஸிஜன் தேவையில்லாமல் சுவாசிக்கவும் பேருதவி செய்வது நிரூபிக்கப்பட்டுள்ளது.அந்த மருந்தை டாக்டர் ரெட்டிஸ் லெபாரட்டரியுடன் இணைந்து டி.ஆர்.டி.ஓ தயாரிக்க உள்ளது.ஆனால், டி.சி.ஜி.ஐ ஒப்புதல் அளித்த இந்த புதிய கோவிட் 19 மருந்து குறித்த ஆய்வுக் கட்டுரையை வெளியிட்ட முதல் இந்திய நிறுவனம் பதஞ்சலிதான். கொரோனாவுக்கு எதிரான முதல் சான்றுகள் சார்ந்த ஆயுர்வேத மருந்து குறித்த ஆராய்ச்சியை வெளியிட்டதால் பாபா ராம்தேவின் பதஞ்சலி நிறுவனம் கடந்த ஆண்டு ஆயுஷ் அமைச்சகத்திலிருந்து சான்றிதழும் பெற்றது.

### எது சிறந்த மருத்துவம்:

உலகில் உள்ள எந்த மருத்துவமுறையும் முழுமையானது இல்லை.அனைத்திலும் நிறை குறைகள் இருக்கவே செய்கின்றன. நமது பாரம்பரிய மருத்துவமுறையில் தீர்வு உள்ளது என கூறப்பட்டாலும், முற்காலத்தில் இருந்த மருத்துவமுறைகளில் பல வழக்கொழிந்துவிட்டன அல்லது மறக்கடிக்கப்பட்டுவிட்டன. உலக சுகாதார நிறுவனம், 'ஆங்கில மருத்துவத்தால் சில நோய்களை தீர்க்க முடியாது எனவே அந்த மருத்துவர்கள் அதனை சரி செய்வோம் என நோயாளிகளுக்கு உறுதியளிக்கக் கூடாது' என கூறி அதற்குத் நீண்டதொருப் பட்டியலே வெளியிட்டுள்ளது. எனவே, அனைத்துத்துறை மருத்துவர்களும் இணைந்து ஒருங்கிணைந்த சிகிச்சைமுறையை மேற்கொள்வதை குறித்து ஆராய வேண்டும்.இதில் 'நோயாளியின் ஆரோக்கியம்தான் முக்கியமே தவிர, நீ பெரியவனா, நான் பெரியவனா' என்ற போக்கு தேவையற்றது.மருத்துவத் தந்தை அலோபதி மருத்துவர்கள் குறிப்பிடும் ஹிப்போகிரேடஸ்கூட கூட்டு மருத்துவமுறையை ஆதரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மதிமுகன்





# மாவீரன் ஜெய்ஹிந்த் செண்பகராமன் பிள்ளை



அன்றைய திருவாங்கூர் சமஸ்தானத்துக்குட்பட்ட பகுதியில் "எட்டு வீட்டுப் பிள்ளைமார்" குடியில் பிறந்தவர். இவர் திருவனந்தபுரத்தில் வசித்தபோது அங்கு வசித்த ஒரு ஜெர்மானியர் அழைப்பின் பேரில் இவர் 1908ஆம் ஆண்டு செப்டம்பர் 22ஆம் தேதி தனது பதினேழாம் வயதில் தாய்நாட்டை விட்டு ஜெர்மனிக்குச் சென்றார்.

தன்னுடைய அறிவு, ஆற்றல், செயல்பாடுகளால் அன்றைய ஜெர்மனியில் அதிபர் வில்லியம் கெய்சரைக் கவர்ந்தார்.பல மொழிகளைக் கற்றார்.பத்திரிகைகளையும் நடத்தினார்.டாக்டர் பட்டமும் பெற்றார்.அப்போது பாரதத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் சுதந்திரத்துக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கிய நேரம். இவரோ ஜெர்மனியின் உதவியோடு ஆங்கிலேயர்களின் மீது போர் தொடுத்து அவர்களை விரட்டிவிட்டு பாரதத்தைச் சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்ய திட்டமிட்டார்.அதற்காக 'இந்தியன் நேஷனல் வாலண்டியர்ஸ்' அமைப்பை உருவாக்கினார்.இவர்தான் முதன் முதலில் தாய்நாட்டை வணங்க "ஜெய் ஹிந்த்" எனும் கோஷத்தை முழங்கினார்.இவரது அடிச்சுவட்டில்தான் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய ராணுவத்தை அமைக்கவும், "ஜெய்ஹிந்த்" கோஷத்தை முழக்கமிடவும் தொடங்கினார்.

1914 தொடங்கி முதல் உலக மகா யுத்தம் நடைபெற்றது. ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் பிரிட்டிஷாரின் கப்பல்களை உடைத்தெறிந்தன.அப்படிப்பட்டதொரு கப்பல்தான் 'எம்டன்'. அது சென்னை கடற்கரைக்கு வந்து குண்டுகளை வீசியது.அந்த கப்பலில் தலைமை இன்ஜினீயராக வந்தவர் செண்பகராமன் பிள்ளை. யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது விமானத்தில் பறந்து பிரிட்டிஷ் பட்டாளத்தில் இருந்த பாரத சிப்பாய்களிடம் லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை வீசி, பிரிட்டனுக்கு எதிராக அவர்களது துப்பாக்கிகளைத் திருப்புமாறு கோரினார். ஜெர்மனியிடம் பிடிபட்ட ஆயிரக்கணக்கான பாரத யுத்தக் கைதிகளை மீட்டு மறுவாழ்வு அளித்தார்.

மெஸபடோமியா யுத்த கேந்திரத்தில் போராடிய சுதேசி இராணுவத்தைக் கொண்டு சூயஸ் கால்வாய் வழியாக பாரதத்திற்கு வரும் ஆங்கிலேயத் தளவாடங்களைத் துண்டித்து, உள்நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கும் விடுதலைப் புரட்சிக்கு உதவினார். ஹிட்லர் ஜெர்மனியின் அதிபராக ஆன பின்பு இவருக்குப் தொல்லைகள் ஆரம்பித்தன.ஹிட்லர் பாரதத்தை கேவலமாகப் பேசப்போக, அதனை கண்டித்த செண்பகராமன் ஹிட்லரை மன்னிப்பு கேட்க வைத்தார்.அதன் விளைவு 1936ல் வீரன் செண்பகராமன் மரணத்தைத் தழுவினார்.

மாவீரன் ஜெய்ஹிந்த் செண்பகராமனின் நினைவு தினம் இன்று.

ஜெ. எஸ் ஸ்ரீதரன்

# சேவைத்துளிகள்



1. சேவாபாரதி தமிழ்நாடு தொண்டு நிறுவனத்தின் சார்பாக உடல் ஊனமுற்ற மற்றும் பார்வையிழந்த 80 பேருக்கு மளிகை சாமான்கள் அடங்கிய ஒரு பை மற்றும் ஹோமியோபதி மருந்து வழங்கப்பட்டது. தமிழக அரசின் மாவட்ட குழந்தைகள் நலக் குழுத் தலைவர் தாமோதரன் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.வந்தவர்களில் பாதி பேர் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள்.மீதி பேர் தடுப்பூசி போட்டுக் கொள்ள உறுதி அளித்துள்ளனர்.



2. கும்மிடிப்பூண்டி சின்ன நத்தம் கிராமத்தில் நடைபெறும் இரவு பாடசாலை ஆசிரியர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்கள் உள்ளிட்ட 98 பயனாளிகளுக்கு ராமானுஜா தொண்டு நிறுவனம் மூலமாக மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.




3. சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக வடபழனி, திருவொற்றியூர், அம்பத்தூர், தாம்பரம், மாம்பலம், பெரம்பூர், மேடவாக்கம் மற்றும் ஆத்தூர் ஆகிய பகுதிகளில் முன்கள பணியாளர்கள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.







# காஞ்சி பரமாச்சாரியார் ஜெயந்தி



பரமாச்சாரியார், காஞ்சி மடத்தில் அருளொளிதுலங்க அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி நிறைய அடியவர்கள் குழுமியிருந்தார்கள். அவரின் தெய்வீகப் பொலிவு நிறைந்த திருமுகத்தை மீண்டும் மீண்டும் தரிசிப்பதில் எல்லாருக்கும் ஓர் ஆனந்தம். சிலர் அவரிடம் வாய்விட்டுத் தங்கள் குறைகளைச் சொன்னார்கள். சிலர் மனத்தாலேயே அவரிடம் முறையிட்டார்கள். வேறு சிலர் உங்களையே தரிசித்தபின் எங்களுக்கேது குறை என்பது போல் நிம்மதியாய் அமர்ந்திருந்தார்கள்.

அப்போது ஓர் அடியவர் பரமாச்சாரியார் தன் பக்தர்களின் வினாக்களுக்கெல்லாம் மிகுந்த பொறுப்போடு பதில் சொல்கிறவர் தானே! தம்முடைய இந்த வினாவுக்கும் கட்டாயம் பதில் சொல்வார் என்ற எதிர்பார்ப்போடு ஒரு கேள்வியை கேட்டார். "சுவாமி! வெளிநாட்டைச் சேர்ந்தவரான பால்பிரண்டனுக்கு, நள்ளிரவில் காற்றுவெளியில் தோன்றி நீங்கள் காட்சி கொடுத்தீர்களாமே! அது பரமாச்சாரியாரின் நிஜமான தோற்றம்தான், என் மனப் பிரமையல்ல என்று அவர் தன் புத்தகத்தில் அந்த சம்பவத்தைப் பதிவு செய்திருக்கிறாராமே! அப்படியானால் இங்கிருந்து கொண்டே இன்னோர் இடத்தில் உங்களால் தோன்ற முடியுமா?''

தற்புகழ்ச்சியை முழுவதுமாகத் துறந்து விட்டவரும், தன் ஆற்றல்களை ஒருபோதும் பிரகடனப் படுத்திக் கொள்ளாதவருமான பரமாச்சாரியார், இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போகிறார் என்று எல்லாரும் ஆவலோடு காத்திருந்தார்கள்.

கேள்வி கேட்டவரையே, பரிவோடு சற்றுநேரம் பார்த்த பரமாச்சாரியார் பிறகு ஒரு முறுவலுடன், "அதனால்தான் நான் எப்போதும் சொல்கிறேன். தூங்குவதற்கு முன் நல்ல நினைவுகளையே நினைத்துக் கொண்டு தூங்க வேண்டும்!'' சொல்லி விட்டுப் பரமாச்சாரியார் எழுந்து மடத்திற்குள் போய்விட்டார்.

அந்த பதில் மூலம் எல்லார் மனதிற்குள்ளும் போய்விட்டார். புகழைத் துறந்த அவரது பதிலைக் கேட்ட சிலர், கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள். சிலர் கீழே விழுந்து நமஸ்கரித்தார்கள். தான் செய்த அற்புதத்தைக் கூடத் தானே ஒப்புக்கொள்ள மறுத்தவர்போல், புறந்தள்ளும் அவரது முற்றும் துறந்த துறவுநிலை கண்டு, கேள்வி கேட்டவரின் கன்னங்களில் பக்திக் கண்ணீர் வழியத் தொடங்கியது.

மைதிலி சீனு